DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதன்கிழமை 2ம் நாள் சாட்சியாகிய தரணி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தரணி | வயது | 41 |
| க/பெ. | மதி | இனம் | பெண் |
| கிராமம் | செய்யூர் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C. 97/2022**

(1 முதல் 3 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**<u>மனுவின் பேரில் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை 02.04.2025</u>**

**<u>அ.சா.1</u>**

1. 2,3 எதிரிகள் எனது கணவரின் சகோதரர்கள் என்றால் சரிதான். 1வது எதிரி எனது கணவரின் சகோதரரின் மகன் என்றால் சரிதான். எனது மகள் சவிதா, சக்கவர்த்தி என்பவரை காதல் திருமணம் செய்து கொண்டதால் எனக்கும், எதிரிகளுக்கும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் காதல் திருமணத்திற்கு உதவியதால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2. நான் போலீஸ் விசாரணையில் எனது மகள் காதல் திருமணம் செய்து கொண்டதால், சக்கரவர்த்தி, கருணாகரன் குடும்பத்திற்கும் எங்களுக்கும் முன்விரோதம் இருந்ததாக தெரிவித்துள்ளேன் என்றால், சொல்லியிருப்பேன். எனது மகள் சக்கரவர்த்தியுடன் வசித்து வருகிறார் என்றாலும் எனது மகளுக்கு மூன்று குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான்.

3. எனது முதன்மை சாட்சியத்தில் தெரிவித்துள்ள சங்கதிகளைதான் போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளேனா என்றால் ஆமாம். எனது புகாரிலும் அதைதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் எழுதினார்கள். புகாரில் உள்ள திருத்தத்தை யார் செய்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. புகாரை எழுதியவர்கள்தான் திருத்தியிருக்க வாய்ப்பு உள்ளது என்றால்

எனக்கு படிக்க தெரியாது. புகாரில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. எனது முதன்மை சாட்சியத்தில் 5 நபர்கள் என்னை தாக்கியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என்னை 5 நபர்கள் தாக்கியதாகதான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். போலீசார் 3 நபர்கள் தாக்கியதாக வழக்கு தாக்கல் செய்து இருந்தால் அது தவறு என்றால் சரிதான். போலீசாரை எங்கு வைத்து பார்த்தேன் என்றால் மருத்துவமனையில் பார்த்தேன். அதன்பிறகு பார்க்கவில்லை. எனது கணவரும் மருத்துவமனையில்தான் போலீசாரை பார்த்தார் என்றால் சரிதான். அப்போதுதான் எனது கணவரிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

5. எனது புகாரில் சுந்தர் எனது கணவரை கையால் தாக்கியதாகவும், போலீஸ் விசாரணையில் கருணாகரன் எனது கணவரை கையால் தாக்கியதாகவும், முதன்மை சாட்சியத்தில் திலிப் தாக்கியதாகவும் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதன்மை சாட்சியத்தில் தெரிவித்துள்ளதுபோல் புகாரில் இல்லை என்றால் அது பொய்யான புகார் என்றால் சரிதான்.

6. நான் சண்டைக்கு சென்று எனது கணவர் தடுத்ததால் தள்ளு முள்ளு ஏற்பட்டு எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. திலிப் என்னை கல்லு, ராடு, கொம்பால் தாக்கியதாக புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல நான் தெரிவித்தேன். நான் சொன்னதை போலீசார் எழுதிக்கொண்டார்கள். புகாரில் எனது வலது தோள்பட்டையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் மற்றும் போலீஸ் விசாரணையில் தெரிவிக்காத சங்கதிகளை முதன்மை சாட்சியத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. நான் எனது முதன்மை சாட்சியத்தில் திலிப் எனது வீட்டியிடம் வந்து நின்றுகொண்டிருந்தபோது நான் கேட்டதற்கு அசிங்கமாக பேசி தலைமுடியை பிடித்து கீழே தள்ளியதாக தெரிவித்துள்ளதை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது முதன்மை சாட்சியத்தில் பிறகு அங்கு வந்த எதிரிகள் கருணா, சுந்தர், மதன், சுமன், திலிப் தகராறு செய்ததாகவும், எதிரிகள் சேலையை பிடித்து இழுத்தாக தெரிவித்துள்ளதை போலீஸ் விசாரணையில் தெரிவிக்கவில்லை

என்றால் சரியல்ல.

8. நான் எனது முதன்மை சாட்சியத்தில் தெரிவித்துள்ள சங்கதிகள் உண்மையா என்றால் உண்மைதான். எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை அரசு தரப்பில்:**

9. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசில் தெரிவித்ததை அவர்கள் எழுதிக்கொண்டதை கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.